முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1214

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.01.2023, புதன்கிழமை

1. தர்மஞானியே அரங்கா போற்றி
தவபலம் கொண்ட தேசிகா போற்றி
மாறுதலை உலகில் செய்வேன் என்று
மாதவசியாக வந்த அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் தை மாதம் 11 ம் நாள் 25.01.2023, புதன்கிழமை)
பூவுலகில் அரங்கன் தர்மத்தால் வறுமை விலகும்
வையகமே மாற்றம் வளர்ச்சிமிக்க ஞான பூமியாக மாறும்
3. மாறுதலை செய்யும் முகாந்திரமாக
மாதர்மத்தை கையில் எடுத்து அரங்கன்
உலகோரின் பசிப்பிணி விரட்டி
உயர்ஞானம் தந்து காத்துவர
4. வருகின்ற அரங்கன் மார்க்கம்
வல்லமைபட உலகில் பரவி நின்றால்
தருகின்ற மக்களாக அனைவரும் தயவுகூடி
தரணியில் தர்மவான்கள் எனும் அடையாளத்தோடு
5. அடையாளம் கூடிட ஆத்ம ஞானபலம் கூடி
அரங்கன் வழி அவரவரும் ஞானிகளாக
மிகையான மாற்றங்கள் உலகம் சடுதி கண்டு
மண்ணுலகம் ஞானசித்தர் காலமாக
6. ஆகவே மாற்றம் பெறக்கூடும்
அரங்கன் தொண்டர்களைகொண்டு இந்த அற்புதம்நிகழக்கூடும்
நலம்பெற உலகோர் அவசியம் அரங்கன் வழி
வந்து நின்று இந்த அற்புதத்தை ஏற்று
7. ஏற்றுமே நாளும்நாளும் தர்மம்
இயன்ற வண்ணம் சன்மார்க்க நெறி நின்று
குறைவில்லா அரங்கன் சேவையை உலகமெங்கும்
கொள்கையாகக் கொண்டு செயல்பாடு காண
8. காணவே உலக மாற்றமாக
கந்தவேலன் யான் அரங்கன் தொண்டர்வழி
தொண்டு வழி நடத்தி ஞானபூமியாக்கி இந்த உலகில்
ஞான ஆட்சிதனை நிறுவுவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–